**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of Judicial Magistrate, Gingee.**

**CC.No. 88/2021**

| | |
|---|---|
| Deposition of Witness for PW | : 7 |
| Name (திரு/திருமதி) | : முருகேசன் |
| Father's Name/ Husband's Name | : முனுசாமி |
| Village & Taluk | : ஆத்திப்பட்டு |
| Calling | : கூலி |
| Age | : 48 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.03.2026**

1 முதல் 6, 8 முதல் 10, 12 எதிரிகள் ஆஜர். 7,11,14, 15 எதிரிகள் ஆஜர் இல்லை. கு.வி.மு.ச. பிரிவு 317/ 355 BNSS-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.) 13 ம் எதிரி இறந்துவிட்டார்.

**முதல் விசாரணை :**

தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 1 வது கைரேகை என்னுடையது அல்ல. இவ்வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. காவலர்கள் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி சாட்சியை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது).**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

கடந்த 16.04.2015 ம் தேதி காலை 8.00 மணிக்கு நானும், எங்கள் தெருவை சேர்ந்த ரமேஷ் என்பவரும் உண்ணாமலை வீட்டின் அருகே நின்று கொண்டிருந்தோம் என்றால் இல்லை. அப்போது எங்கள் ஊரை சேர்ந்த உண்ணாமலை என்பவருக்கும் விஜயகுமார் என்பவருக்கும் ஏற்பட்ட சண்டை சம்பந்தமாக அவலூர்பேட்டை காவலர்கள் சம்பவ இடத்தை பார்வையிட்டார்கள் என்றால் இல்லை. அப்போது நானும், ரமேஷ் என்பவரும் சாட்சி கையொப்பம்

செய்தோம் என்றால் இல்லை. நான் காவலர்கள் படம் வரைந்தபோது உடனிருந்து அதனை பார்த்து கையொப்பம் செய்துவிட்டு தற்போது எதிரியை காப்பாற்ற வேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

இல்லை என குறிப்பிடப்பட்டது

**மறு விசாரணை :** இல்லை.

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

Sd/- B.Vidhya,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of Judicial Magistrate, Gingee.**

**CC.No. 88/2021**

| | |
|---|---|
| Deposition of Witness for PW | : 8 |
| Name (திரு/திருமதி) | : ரமேஷ் |
| Father's Name/ Husband's Name | : அண்ணாமலை |
| Village & Taluk | : ஆலம்பூண்டி |
| Calling | : கூலி |
| Age | : 50 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.03.2026**

1 முதல் 6, 8 முதல் 10, 12 எதிரிகள் ஆஜர். 7,11,14, 15 எதிரிகள் ஆஜர் இல்லை. கு.வி.மு.ச. பிரிவு 317/ 355 BNSS-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.) 13 ம் எதிரி இறந்துவிட்டார்.

**முதல் விசாரணை :**

தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2 வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். சுமார் 5 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் அத்திப்பட்டில் உள்ள எனது அக்கா வீட்டின் அருகே இருந்தபோது பென்னாத்தூர் காவலர்கள் சம்பவ இடத்தை பார்வையிட்டு விசாரித்தார்கள். அப்போது மேற்படி கையொப்பத்தை செய்தேன். **மேற்படி பார்வை மகசரில் உள்ள 2 வது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** காவலர்கள் என்னை விசாரித்தனர்.

**(அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி சாட்சியை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது).**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

கடந்த 16.04.2015 ம் தேதி காலை 8.00 மணிக்கு நானும், முருகேசன் என்பவரும் உண்ணாமலை வீட்டின் அருகே நின்று கொண்டிருந்தோம் என்றால் சரிதான். அப்போது எங்கள் ஊரை சேர்ந்த உண்ணாமலை என்பவருக்கும் விஜயகுமார் என்பவருக்கும் ஏற்பட்ட சண்டை சம்பந்தமாக அவலூர்பேட்டை காவலர்கள் சம்பவ இடத்தை பார்வையிட்டார்கள் என்றால்

சரிதான். அப்போது நானும், முருசேகன் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம் என்றால் சரிதான். காவலர்கள் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. பென்னத்துார் காவலர்கள் தான் என்னை விசாரித்தனர் என்றால் சரிதான். என்னை அவலுார்பேட்டை காவலர்களும் விசாரித்தார்கள். கடந்த 2020ம் வருடம் எந்த தேதியில் அவலுார்பேட்டை காவலர்கள் விசாரித்தனர் என்பது தற்போது நினைவில் இல்லை.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறு விசாரணை :** இல்லை.

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

Sd/- B.Vidhya,

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

செஞ்சி.